




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், குழந்தைகள் இல்ல நிர்வாகிகளுக்கான திறன் வளர்ப்பு பயிற்சி நாகர்கோவில், ஈடன் ஹாலில் இன்று (22.07.2016) நடைபெற்றது.

செ.வெ.எண்: 467/2016 நாள்: 22.07.2016

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், குழந்தைகள் இல்ல நிர்வாகிகளுக்கான திறன் வளர்ப்பு பயிற்சி இன்று (22.07.2016) நடைபெற்றது.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், சமூக பாதுகாப்பு துறையின் மூலம், குழந்தைகளின் பாதுகாப்புக்காக பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்கள். மேலும் குழந்தைகள் இல்ல நிர்வாகிகளுக்கு ஒருங்கிணைந்த குழந்தைகள் பாதுகாப்பு திட்ட வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் குழந்தைகள் இல்லங்களில் கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகள் குறித்து பயிற்சி வழங்க ஆணையிட்டுள்ளார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், குழந்தைகள் இல்ல நிர்வாகிகளுக்கான திறன் வளர்ப்பு பயிற்சியினை நாகர்கோவில், ஈடன் ஹாலில் இன்று (22.07.2016) துவக்கி வைத்து, தலைமையுரையில் பேசும் போது தெரிவித்ததாவது:-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியத்திற்கு எந்த ஒரு பாதிப்பும் ஏற்படாதவகையில், சமூக பாதுகாப்பு துறையின் மூலம், பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்கள்.

அதனடிப்படையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள 78 குழந்தைகள் இல்லங்களில் உள்ள நிர்வாகிகள் கடைபிடிக்க வேண்டிய நெறிமுறைகள் குறித்து ஒருநாள் பயிற்சி அளிக்கப்படுகிறது. குறிப்பாக அரசால் வழங்கப்பட்டுள்ள விதிமுறைகளை பின்பற்றுவதை குறித்தும், குழந்தைகளுக்கு தேவையான அடிப்படை வசதிகளான தங்கும் இடம், குடிநீர் வசதி, கழிப்பறை வசதி மற்றும் அவர்களின் பாதுகாப்பு குறித்து நன்னடத்தை அலுவலர்களால் விளக்கம் அளிக்கப்படுகிறது. மேலும் இல்ல நிர்வாகிகள், பெண் குழந்தைகளின் பாதுகாப்பு குறித்தும், வைரஸ் காய்ச்சல் போன்ற நோயினால் பாதிக்கப்படாமல், இருக்க சுற்றுபுறத்தினை தூய்மையாகவும், பசுமையாகவும் வைத்துக்கொள்ள எடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்தும் பயிற்சி வழங்கப்படுகிறது. மேலும் குழந்தைகளின் கல்வி மற்றும் அவர்களின் குடும்பத்தினரின் முழு விவரத்தினை தெரிந்து கொள்வதோடு, பதிவேட்டில் பதிவு செய்து, பாதுகாப்பாக வைத்துக்கொள்ள வேண்டும். இது போன்ற அரசால் வழங்கும் விதிமுறைகளை பின்பற்ற தவறினால், சட்டத்தின்படி அவர்களது அங்கீகாரம் ரத்து செய்யப்படும். எனவே குழந்தைகள் இல்ல நிர்வாகிகள் விதிமுறைகளை கடைபிடித்து, நமது மாவட்டத்தில் எந்தவொரு அசம்பாவிதம் இல்லை என்ற நிலையை உருவாக்கிட, மாவட்ட நிர்வாகத்திற்கு முழு ஒத்துழைப்பு நல்குவதோடு, திறன் வளர்ப்பு பயிற்சியில் ஏதேனும் சந்தேகம் இருந்தால் அதனை உடனடியாக சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் கேட்டு தெரிந்து கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் திருமதி. எஸ். குமுதா, மாவட்ட சமூக நலத்துறை அலுவலர் திருமதி. கே.உமா மகேஸ்வரி, மாவட்ட நன்னடத்தை அலுவலர்கள் திரு. எஸ். ராஜபதி, முனைவர் வி. வெங்கட்ராமன் உள்ளிட்ட அரசு அலுவலர்கள், குழந்தைகள் இல்ல நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.